முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு.ஜெ. ஆன்ஸ் ராஜா, பி.ஏ., பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), வள்ளியூர்

2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 24 ஆம் நாள் திங்கள் கிழமை

அசல் வழக்கு எண். 59/2017

1. கிருஷ்ணம்மாள்

2. முத்து லெட்சுமி

3. முருகேசன்

4. சாந்தி

5. ஆறுமுகம் ... வாதிகள்

//எதிர்//

1. கிருஷ்ணன் ஆசாரி (இறப்பு)

2. முத்து கிருஷ்ணன்

3. சரஸ்வதி

4. முருகன்

5. இசக்கிமுத்து

6. ஆறுமுகக்கனி

7. நாகராஜன்

8. ராமு ... பிரதிவாதிகள்

(Plaint Amended as per the order in I.A.No.1/2019 dated 08.11.2019)

இவ்வழக்கானது 24.07.2023 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E. இராவணசிவன் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி காலம் சென்றுவிட்ட நிலையிலும், 2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.07.24 14:09:56 +0530

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், வா.சா.1 ஐ குறுக்கு விசாரைண செய்வதற்காக அழைத்தும் ஆஜரில்லாததாலும், மற்ற வாதிகளும் ஆஜராகாத நிலையில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.....

## தீர்ப்புரை

இவ்வழக்கானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 1ன் கீழ்

அ. 03.02.2005 நாளிட்ட கிரைய ஆவணம் எண். 183/2005 தபசில் பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்து உத்தரவிடவும்,

ஆ. 19.03.2010 நாளிட்ட நன்கொடை ஆவணம் எண். 1099/2010 தபசில் பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்து உத்தரவிடவும்,

இ. 06.02.1980 நாளிட்ட கிரைய ஆவணம் எண். 184/1980 தபசில் பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்து உத்தரவிடவும்,

ஈ. 09.12.2004 நாளிட்ட கிரைய ஆவணம் எண். 1731/2004 தபசில் பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்து உத்தரவிடவும்,

உ. தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து அதற்கு பின்னீடாக தபசில் சொத்தில் வாதிகளின் தனித்த அனுபவத்தினை

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.07.24 14:10:09 +0530

எதிர்வாதிகளோ / வகையறாக்களோ / முகவர்களோ இடைஞ்சல் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும்

ஊ. செலவு தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*வா.சா.1ஐ குறுக்கு விசாரைண செய்வதற்காக அழைத்தும் ஆஜரில்லாததாலும், மற்ற வாதிகளும் ஆஜராகாத நிலையில், வாதிகளின் வருகை தவறுகை காரணமாக இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2023 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 24 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.07.24 14:10:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)

வள்ளியூர்.